## கல்லூரிக் கீதம்

போற்றிசெய் வோம் எங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி ( போற்றி)

ஸ்கந்த வரோதய எங்கள் கல்லூரி
சந்தத மும்புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே

ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரும் இங்கே

பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்!
உறவென்றும் நீயே உண்மையோ டுனக்கா(க)
உழைத்திடு வோமென்றும் நாமே.

ஏந்தை யெனத் தகு கந்தைய வள்ளலின்
சிந்தையி லெழுந்தகல் லூரி
செந்தண்மை மருத்துவன் சுப்பிர மணியனின்
சேவையில் உயர்ந்த கல்லூரி
சேவையில் உயர்ந்த கல்லூரி
சேவையில் உயர்ந்த கல்லூரி
சேவையில் உயர்ந்த கல்லூரி

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வளமலிந் தோங்கியே என்றும்
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
வளரிள மதியெனவே
வாழிய எங்கள் கல் லூரி.

வித்துவான் சி. ஆறுமுகன்.